முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் மங்கையற்கரசியார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

02.01.2019, புதன்கிழமை

1. **தலைமை ஞானி சக்தி கொண்ட அரங்கா**
**தவமுடன் தருமபலம் கொண்ட தேசிகா**
**தலைவன் ஆறுமுகனாரின் சூட்சுமம்**
**தனித்துவம் கலந்த மாதவசியே**
2. தவசியே ஆறுமுக அரங்கனே
தரணியிலே உன் பெருமை கூறி
அவணியிலே ஒளி சூட்சும நூலை
அறிவிப்பேன் **விளம்பி சிலை திங்கள்**
3. **திங்களிலே மூவாறு திகதி புந்தி வாரம்**
**(விளம்பி வருடம் மார்கழி மாதம் 18ம் நாள் 02.01.2019, புதன்கிழமை)**
**தேசிகனுக்கு மங்கையர்கரசியாரும்**
இங்கனமே உலகநலமுற உரைப்பேன்
இயம்பிடுவேன் கலியுகம் காப்பு பெறவே
4. காப்பு பெறவே மேலுலக சக்திகள்
கந்தனிடம் வேண்டி அவதாரம்
ஒப்புகொண்டு அரங்கமகனான
உயர் தருமவானை முடிவு செய்து
5. செய்துமே துறையூர் மண்ணில்
சிறப்பான அவதாரம் படைத்திருக்க
மெய்ஞானி வள்ளலை போலே
மேலான சுத்தநெறி காட்டி
6. காட்டி அருளி காத்தருளும் உயர்குரு
கலியுகத்தில் வேறெவரும் இல்லையப்பா
வாட்டமற எண்ணிலா கோடி
வல்லமைமிக்க சித்தர் கூட்டமுடன்
7. கூட்டமுடன் அறுபத்து மூவர்கள்
கோட்கள் நாதர்கள் ஆழ்வார்கள்
திட்டமுடன் உலகமகா சக்திகள்
தொடர்ந்து வந்து துணை நிற்க
8. நிற்கவே தரும சாலைதனில்
நீங்கா ஞான சக்தி அன்னசக்தி
ஏற்பு கொண்டு அருள்புரிய
ஏழாம் படை வீட்டு உணவு அருமருந்து
9. அருமருந்து உண்டு வருபவர்க்கு
அவுசதத்தால் கட்டுப்படா பிணியும்
வருமுலகில் அகன்றோடும் என்பேன்
வாசி வென்ற அரங்கன் ஆசி
10. ஆசி பெற ஞான சித்திகளும்
அனைத்து வரங்களும் கிட்டும்
நேசம்பட நல்துணை கூடி
நீதி தருமம் மீறா வாழ்வாய்

11. வாழ்வினில் பாதுகாப்பும் கூடி
வருபவர்கள் ஞானவான்களாவர்
ஊழ்வென்று பெரும் பேறடைவர்
உரைத்திட்ட ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் மங்கையற்கரசி அம்மையார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

ஞானத்திற்கும் ஞானம் பெற்ற ஞானிகளின் தலைவனாகி ஞானத்தலைவனாகிய தலைமை ஞானி முருகப்பெருமானின் முழுமையான சக்தியை கொண்டிட்ட ஆறுமுக அரங்கமகாதேசிகனே அநேகம் அநேகம் தவங்களை செய்து தவபலம் பெற்று எல்லையில்லா தருமங்களைச் செய்து தருமபலமும் அளவிலாது பெற்றிட்ட ஞானதேசிகனே ஞானத்தலைவன் முருகப்பெருமானின் சூட்சுமத்தில் தனித்துவம்மிக்க மகா ஞானியாக கலந்திட்ட மகா ஞான தவசியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலன் கருதி **விளம்பி வருடம் மார்கழி மாதம் 18ம் நாள் 02.01.2019, புதன்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே மங்கையற்கரசியார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் மங்கையற்கரசி அம்மையார்.

எல்லையில்லா இடர்களையும் துன்பங்களையும் மாயையின் வழியாக மக்களுக்கு தந்து துன்புறுத்தும் கலியுகத்தின் இடர்களிலிருந்து மக்களை காத்திடவே மேலுலக சக்திகள் எல்லாம் முருகப்பெருமானிடத்து பணிந்து வேண்டி நிற்க முருகப்பெருமானே இவ்வுலகினில் தோன்றி அவதாரமாக அவதரித்து கலியுகத்தின் இடர்களை தீர்த்திட ஒப்புக் கொண்டு விஷ்ணுபகவானின் மகனான அரங்கமகாதேசிகனார் எனும் உயர் தருமவானை அவதாரம் செய்திட முடிவு செய்துமே ஞானபூமியாம் துறையூர் நகரிலே மிகச் சிறப்பாய் அவதாரமாக அரங்கமகா தேசிகனாரை படைத்திருக்கின்றார்.

முருகப்பெருமானின் அவதாரமாக வந்திட்ட அரங்கமகானும் சிறப்புடனே அவதரித்து மெய்ஞானி வள்ளல் ராமலிங்க சுவாமிகளைப் போலவே இவ்வுலகிற்கு, உலகோர்க்கு கொல்லா நெறியினை போதித்து உயிர்க்கொலை செய்யக் கூடாது, புலால் மறுக்க வேண்டும், ஜோதி வழிபாடு செய்திட வேண்டும், தினம்தினம் மறவாது ஞானத்தலைவனை பூஜை செய்திட வேண்டும், பசித்த ஏழைகளுக்கு பசியாற்றுவிக்க வேண்டும் என உபதேசித்து உத்தமமான இந்த சுத்தநெறியினை உலகோர் கடைப்பிடித்திட வழி வகை செய்தும் உலக மக்களை கடைப்பிடித்திட செய்தும் வழிகாட்டியும் வருகின்றார்.

இப்படி தூயநெறியினை மக்களுக்கு எளிமையாக உரைத்து ஞானத்தின் திறவுகோலான ஜீவகாருண்யத்தை மக்களுள் வரச் செய்து அருள் செய்து காத்தருளும் உயர் ஞானகுரு கலியுகத்தினில் வேறொருவர் எவரும் இல்லையப்பா. அத்தகைய தனிப்பெரும் தன்மை படைத்திட்ட மகா ஞான வள்ளல் சற்குருநாதனே அரங்கனாவார். எண்ணிலா கோடி சித்தரிஷி கணங்களுடன் சிறிதும் அயர்வின்றி தளராது தொண்டுகளை செய்வதுடன் அறுபத்து மூன்று நாயன்மார்கள், நவகோள்களின் தலைவர்களான நவக்கிரக நாயகர்கள், ஆழ்வார்கள் மற்றும் மற்றும் உலகினில் உள்ள உறுதிமிக்க உலக மகா சக்திகளெல்லாம் அரங்கனின் அற்புத செயல்களுக்கு துணையாய் வந்து நிற்கின்றதப்பா.

எல்லா ஞானிகளும், யோகிகளும், தேவர்களும், ரிஷிகளும், முனிவர்களும், நாயன்மார்களும், ஆழ்வார்களும் உலகமகா சக்திகளும் துணையாய் நிற்கும் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடில் தர்மசாலைதனிலே என்றும் நீங்காத ஞானசக்தியும், அன்னசக்தியும் அருள்புரிந்து நிற்கின்றதப்பா. ஆதலினால் ஏழாம் படை வீடு உணவு அருமருந்தாகும், அருள் மருந்தாகுமப்பா.

ஆதலினாலே அருள்மருந்தாகிய, அருமருந்தும் ஆகிய குடில் உணவினை உண்டு வருகின்றவர்களுக்கு மருந்துகளால் மருத்துவத்தால் கட்டுப்படாத நோய்களும் அரங்கனின் திருச்சபையாம் குடிலில் கொடுத்த உணவினால் அகன்று ஓடிவிடுமப்பா.

வாசியை வென்றிட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஆசியை பெற்றிட்டால் எல்லா ஞான சித்திகளும், எல்லா வரங்களும் தானே கிடைத்திடுமப்பா. நட்புடன் கூடிய நல்ல துணைகளும் பெருகி நீதியுடன் தருமத்துடன் வாழ்கின்ற நல்ல வாழ்வாய் வாழ்ந்து அருள் பாதுகாப்பும் பெருகி அரங்கனை நாடி வருவோர் எல்லாம் ஞானவான்களாக ஆகிடுவார்கள், ஊழ்வினைகளையும் வென்று பெரும்பேற்றினை பெற்று சிறப்படைவார்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் மங்கையற்கரசி அம்மையார்.

–சுபம்–